செ. வெ. எண். 890

நாள் 26.11.09

26-11-2009

பத்திரிக்கை குறிப்பு

# தடுத்து நிறுத்தப்பட்ட குழந்தைத் திருமணம்!

சேலம் மாவட்டம் குப்பனூர் கிராமத்தைச் சேர்ந்த தீபா (பெயர் மாற்றப்பட்டுள்ளது) என்ற 14 வயது சிறுமியை கட்டாய திருமணம் செய்ய பெற்றோர்களால் முடிவு செய்யப்பட்டிருந்தது. பள்ளித் தலைமை ஆசிரியரின் மூலம் இத்தகவல் தமிழ்நாடு சமூக நல வாரிய தலைவி கவிஞர் சல்மா அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. வாரியத்தலைவி துரித நடவடிக்கை மேற்கொண்டு, சேலம் மாவட்ட ஆட்சியருக்கு, இக்குழந்தை திருமணம் பற்றிய முழு விவரத்தையும் தெரியப்படுத்தினார். ஆட்சியரின் உத்தரவின்பேரில் சேலம் மாவட்ட சமூக நல அலுவலர் நடக்கவிலிருந்த குழந்தைத் திருமணத்தை தடுத்து நிறுத்தி, சிறுமி தொடர்ந்து கல்வி பயில வழிவகை செய்யப்பட்டது. இப்பொழுது சிறுமி மகிழ்ச்சியாக பள்ளி சென்று வருகிறாள். தலைமை ஆசிரியரின் செயல் பாராட்டுக்குரியது. இதுபோன்று ஒவ்வொரு தலைமை ஆசிரியரும் செயல்பட்டால், குழந்தை திருமணம் என்ற சட்ட விரோத செயல் நம் நாட்டைவிட்டே ஒழிக்கப்பட்டுவிடும், பெண் கல்வியும் காப்பாற்றப்படும் என்று கவிஞர் சல்மா அவர்கள் நம்பிக்கை தெரிவித்தார்.

ஒப்பம்.

கவிஞர் சல்மா
தலைவர்
சமூக நல வாரியம்
சென்னை.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.